# K/SARASWATHY CENTRAL COLLEGE – PUSSELLAWA

## இடர்க்கால விடுமுறைக்கான மாணவர் செயலட்டை – 2021

**தரம்: 11** **பாடம்: கிறிஸ்தவம் (NRC)**

## பவுலின் முதலாம் மறைத்தூதுப் பயணம்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

1.

1. முதன்முறையாக சீடர்களுக்கு ‘கிறிஸ்தவர்கள்’ எனும் பெயர் எங்கு வழங்கப்பட்டது?
2. பவுலின் முதலாம் மறைத்தூதுப் பயணத்தில் அவருடன் சென்றவர்கள் யாவர்?
3. இத்தூதுப் பயணம் ஆரம்பித்த இடம் எது?
4. பவுலையும் பர்னபாவையும் தெய்வங்களாக கருதிய நகர் எது?
5. யோவான் எனும் மாற்கு எந்த இடத்தில் பணியில் இருந்து பிரிந்து சென்றார்?
6. பாப்போவில் பவுல் சந்தித்த நபர் யார்?
7. லிஸ்திராவில் பவுலுக்கு வழங்கப்பட்ட கிரேக்க தெய்வத்தின் பெயர் என்ன?
8. எருசலேம் பொதுச்சங்கத்தின் தலைவராக செயற்பட்டவர் யார்?
9. லிஸ்திராவில் பர்னபாவுக்கு வழங்கப்பட்ட கிரேக்க தெய்வத்தின் பெயர் என்ன?
10. பவுலை எருசலேமில் உள்ள சீடர்களுக்கு அறிமுகப்படுத்தியவர் யார்?
11. முதலாம் மறைத்தூதுப் பயணத்தில் பவுல் சென்ற இடங்கள் 2 தருக.
12. பிறவியிலேயே கால் ஊனமுற்றிருந்த மனிதன் சுகமடைந்த நகரை எழுதுக.
13. பவுல் செர்க்கியு பவுலை சந்தித்த இடம் எது?
14. எருசலேம் பொதுச்சங்கத்தல் எடுக்கப்பட்ட தீர்மானம் ஒன்றினைத் தருக.
15. முதலாம் மறைத்தூதுப் பயணம் எந்த இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது?

2. 1. அ. பவுல் முதலாம் மறைத்தூதுப் பயணத்தில் சென்ற இடங்கள் 4 இனை குறிப்பிடுக.

ஆ. மேற்குறிப்பிட்ட இடங்களில் ஒன்றை தெரிவு செய்து பவுல் முகம் கொடுத்த சவால்களை விளக்குக.

இ. மேற்குறிப்பிட்ட சம்பவத்தினூடாக நீர் கற்றுக்கொள்ளும் படிப்பினைகள் 5 தருக.

2. அ. லிஸ்திராவில் பவுல் செய்த அற்புதத்தை எழுதுக

ஆ. அற்புதத்தை கண்ட மக்களின் பிரதி நடத்தையை விளக்குக.

இ. இச்சம்பவத்திலிருந்து உமது வாழ்வில் நீர் பெற்றுக்கொண்ட முன்மாதிரிகள் 5 தருக.

3. அ. எருசலேம் பொதுச்சங்கம் கூட்டப்பட்டமைக்கான காரணம் யாது?

ஆ. எருசலேம் பொதுச்சங்கத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் 3 தருக.

இ. மேற்குறிப்பிட்ட சம்பவத்தின் மூலம் கூட்டுத் தலைமைத்துவத்தைக் குறித்து நீர் பெற்றுக்கொண்ட வழிகாட்டல்கள் 5 தருக.